அறிமுகம்

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் நன்றிகளும். அல்காஇதா அந் நூரானிய்யா எனும் இந்த நூல் குர்ஆனை முறையாகத் தஜ்வீது சட்டப்படி ஓதுவதற்கு எளிதாக வழிகாட்டுகிறது. அஷ்ஷெய்க் நூர் முஹம்மது ஹக்கானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் வடிவமைத்த இதன் பாடங்கள் உலகின் பல பகுதிகளில் சிறியோர் முதல் பெரியோர் வரை படிக்கப்படுகின்றன.

ஏற்கனவே இந்நூலின் மூலமாக பலரும் குர்ஆன் ஓதுதல் முறையை நல்ல ஆசிரியர்களிடமிருந்து கற்று வந்தாலும், இதிலுள்ள ஒவ்வொரு பாடங்களிலும் உள்ள சட்டங்களை விளக்குகின்ற குறிப்புகள் கிடைக்கப் பெறாமல் இருந்தன. இக்குறையை நிவர்த்தி செய்யும்விதமாக இந்தப் பதிப்பு கூடுதல் பக்கங்களுடன் வெளியாகின்றது.

ஒவ்வொரு பாடத்திற்குமான விளக்கக் குறிப்புகள் இரண்டு பகுதியான இதனுள் அமைந்துள்ளன. முதலாவது, அஷ்ஷெய்க் ஃபத்தஹ் முஹம்மது மற்றும் அஷ்ஷெய்க் முஹம்மது தாஹிர் அர்ரஹீமீ ஆகியோர் வழங்கிய குறிப்புகள். இவையே அனைத்துப் பாடங்களின் தொடக்கத்தில் உள்ளன. இரண்டாவது பகுதி, அவற்றில் விடுபட்ட பிற விசயங்களைக் கவனத்திற்குத் தருவதாகும். இவை 'மேலதிகக் குறிப்புகள்' எனும் தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளன. அனைத்துமே ஆசிரியர்களுக்கு ஒரு நினைவுக் குறிப்புகளாகவும், மாணவர்களுக்கு வழிகாட்டிக் குறிப்புகளாகவும் அமைகின்றன.

மறக்கக்கூடாத சில விசயங்கள்

எல்லாப் பாடங்களும் முக்கியப் பாடங்களே. என்றாலும், முதல் இரண்டு பாடங்கள் மற்ற பாடங்களை விட மிக மிக முக்கியமானவை; அடிப்படையானவை. இவற்றில் நன்கு தேர்ச்சி அடையாமல் அடுத்த பாடங்களுக்குச் செல்லவே கூடாது.

யார் முந்திய பாடங்களைத் திருத்தமாகக் கற்றுக்கொள்ளவில்லையோ அவர் அதற்குப் பின்னுள்ள எல்லாப் பாடங்களிலும் தவறுகள் செய்வார். அதன் விளைவாகக் குர்ஆனையும் தவறாக ஓதிக்கொண்டிருப்பார்.

தனியாக ஓதும்போது தவறுகள் திருத்தப்படாது. எனவே, நல்ல ஆசிரியர் ஒருவரின் கண்காணிப்பில் கற்றுக்கொள்ள வேண்டும்.

பாடங்களைப் படிக்கும்போது ஒவ்வோர் எழுத்துக்கும் கீழே விரலை வைத்து உச்சரிக்க வேண்டும். எழுத்துகளையும் குறியீடுகளையும் கவனமாகப் பார்த்து படிக்க வேண்டும். ஆசிரியர் எந்தத் தொனியில், சுதியில் ஓதிக்காட்டுகிறாரோ அவரைப் போலவே ஓத வேண்டும்.

அவை தனித்தனி எழுத்துகளே. அவற்றின் பெயர்களில் இரண்டு எழுத்துகள் கொண்டவையும், மூன்று எழுத்துகள் கொண்டவையும் உண்டு. இரண்டு எழுத்துகள் உள்ளவற்றை ஓர் அலிஃப் ا அளவு நீட்ட வேண்டும். இதற்கு அடையாளமாக அலிஃப் சகீறா ٰ(கடா ஜபர்) இருப்பதைக் கவனியுங்கள். உதாரணம்: ظٰ ரா, தோ, ஹா.

2. மூன்று எழுத்துகள் உள்ள பெயர்களை 4 அலிஃப் அளவு நீட்ட வேண்டும். காரணம், அவற்றில் اوي அலிஃப், வாவ், யா ஆகிய மத்து எழுத்துகளை அடுத்து சுகூன் உள்ளது. இதற்கு அடையாளமாக (~) மத்து இருக்கும். உதாரணம்: ل م ن லாம், மீம், நூன்..

3. الم அலிஃப், லாம், மீம் என்பதில் லாம் உடைய உச்சரிப்பின் இறுதியில் மீம் உள்ளது. அதோடு அடுத்த எழுத்தாகவும் மீம் உள்ளது. லாமை 4 அலிஃப் அளவு நீட்டி அதன் முடிவில் மீமை உச்சரிக்கும்போது மீமுக்கு மேல் ஷத்து இருப்பதால் ஓர் அலிஃப் நேரம் அழுத்தி குன்னாவுடன் உச்சரிக்க வேண்டும்.

4. طسم தோ, சீன், மீன் என்பதில் சீன் உடைய யாவையும் அடுத்துள்ள மீம் உடைய மீமையும் சேர்த்து குன்னா செய்து உச்சரிக்க வேண்டும். காரணம், மீமுக்கு மேல் ஷத்து உள்ளது. எனவே, சீன் உடைய இறுதி எழுத்தான நூனை உச்சரிக்கக் கூடாது.

5. ع س அய்ன், சீன் என்பதில் நூனுக்கு மேல் சுகூன் உள்ளது. எனவே, அதில் إِخْفَاء இக்ஃபா செய்ய வேண்டும். அதாவது, மூக்கில் மறைத்து ஒத வேண்டும்.

பாடம் 4. மூன்று குறியீடுகள்

1. நமது வழக்கத்திலுள்ள ஜபர் ( ), ஜேர் ( ), பேஷ் ( ) இவற்றுக்கு (இவை உருதுமொழி வழக்குச்சொல்) ஹரகத் - அடையாளக் குறி என்று சொல்லப்படும். ஓர் எழுத்தின் மேலுள்ள குறிக்கு ஃபத்ஹ் என்றும், கீழுள்ள குறிக்கு கஸ்ர் என்றும், சிறு வாவு போன்று வளைந்து மேலே உள்ள குறிக்கு ளம் என்றும் சொல்லப்படும்.

2. எழுத்துகளை எழுதி அவற்றின் மேல், கீழ் இந்த ஹரகத்துகளை போட்டுப் பார்க்க வேண்டும்.

3. அவற்றைத் திரும்பத் திரும்பச் செய்து பார்க்க வேண்டும்; சொல்லியும் பழக வேண்டும்.

4. ஹரகத் உள்ள எழுத்துகளை மத்து உள்ள எழுத்தைப்போல் நீட்டி அல்லது இழுத்துப் படிக்க அனுமதிக்கக் கூடாது; புரியாமலும் சொல்லக் கூடாது.

கஸ்ரா என்றால் ஒரு முறை உடைப்பது எனப் பொருள். சிரிப்பு மலரும்போது வாய் உடைந்து இ எனும் ஓசை வெளியாவதால் கஸ்ரா எனப்படுகிறது.	எழுத்துகளுக்குக் கீழே (ِ) இந்தக் குறியீடு இருந்தால் கஸ்ரா
ளம்மா என்றால் ஒரு முறை சேர்வது எனப் பொருள். உதடுகள் குவிந்து உ எனும் ஓசை வெளியாவதால் ளம்மா எனப்படுகிறது.	எழுத்துகளுக்கு மேல் (ُ) இந்தக் குறியீடு இருந்தால் ளம்மா

3. இப்பாடத்தில் உள்ள சிறப்பம்சம், இதன் ஆரம்பம் முதல் இறுதி வரை மக்ரஜ் அடிப்படையில் அமைந்துள்ளது. அதாவது, ஓர் எழுத்து வாயின் எந்த இடத்திலிருந்து வெளியேறுகிறதோ, அந்த இடங்களை வரிசைப்படுத்தி அமைந்துள்ளது. அல்மக்ரஜ் என்றால் வெளியேறும் இடம் எனப் பொருள். இதன் பன்மை அல்மகாரிஜ்.

1	ء ه ع ح غ خ	தொண்டையிலிருந்து வெளியாகும் எழுத்துகள்
2	ق ك	நாக்கின் பின்பகுதி எழுத்துகள்
3	ج ش ي	நாக்கின் நடுப்பகுதி
4	ض ل	நாக்கின் ஓரப்பகுதிகள்
5	ر ن ط د ت ص س ز ظ ذ ث	நாக்கின் நுனிப்பகுதி
6	ف	கீழ் உதடு
7	و ب م	மேல் கீழ் உதடுகள்

முதல் எழுத்து ஹம்ஜா. இது அடித்தொண்டையிலிருந்து பிறக்கிறது. அதிலிருந்து படிப்படியாக தொண்டையின் நடுப்பகுதி, மேல் பகுதி, நாக்கின் பின்பகுதி, நடுப்பகுதி, ஓரப்பகுதிகள், நுனிப்பகுதி என்று இறுதியில் உதடு வரை வந்து மீமுடன் முடிகிறது. அ, இ, உ என்று ஹரகத்துகளைப் பயிற்சி செய்யும்போது இதைப் புரிந்து உச்சரிக்க வேண்டும்.

4. தடிமனான எழுத்துகள் எப்படி கஸ்ராவுடன் உச்சரிக்கும்போது வித்தியாசப்படுகின்றன என்பதை விளக்கவும்.

இறுதியில் சுகூன் செய்து நிறுத்த வேண்டும். ஏற்கனவே அங்கு சுகூன் இருந்தால் இயன்ற வரை சப்தத்தையும் மூச்சையும் நிறுத்த வேண்டும்.

5. வட்ட வடிவிலுள்ள (குண்டு தே என்று கூறப்படுகிற) ة த வின் மீது நிறுத்த நினைத்தால், அதை ஹ வாக மாற்றிவிட வேண்டும் எ.கா: نُطْفَةٌ என்பதை نُطْفَهْ என்று உச்சரிப்பதுபோல

6. எந்த எழுத்தின் மீது (வக்ஃப்) நிறுத்த வேண்டுமோ அந்த எழுத்து தன்வீன் ஃபத்ஹா பெற்றிருந்தால் அதை அலிஃபாக மாற்றி நிறுத்த வேண்டும். எ.கா: اَحَدًا – اَحَدَا

மேலதிகக் குறிப்புகள்

1. ஹம்ஜாவில் இரண்டு வகைகள் உண்டு.

ஒன்று, أ ؤ ئ அலிஃப், யா, வாவ் ஆகிய எழுத்துகளின் மேல் வருபவை. கட்டாயம் அப்போது உச்சரிக்க வேண்டும். இதை ஹம்ஜத்துல் கத்இ (هَمْزَةُ الْقَطْعِ) எனப்படும். எ.கா: أَفْوَاجاً

இன்னொன்று, நடுவில் வருபவை. அதன் மீது சிறிய மீம் போன்ற குறியீடு இருக்கும். அதை உச்சரிக்கக் கூடாது. இதை ஹம்ஜத்துல் வஸ்ல் (هَمْزَةُ الْوَصْلِ) எனப்படும். வஸ்ல் என்றால் சேர்த்தல். எ.கா: وَالْفَتْحُ

ஹம்ஜத்துல் வஸ்ல் விசயத்தில் இரண்டு சட்டங்களை நினைவில்கொள்ள வேண்டும்.

1. அது தொடக்கத்தில் வந்து, அதனை அடுத்து லாம் வந்தால், ஹம்ஜாவுக்கு எப்போதும் ஃபத்ஹாதான் வரும்.

2. நடுவில் வந்தால் அதனை எப்போதும் உச்சரிக்கப்படாது.

இரண்டுக்குமான எடுத்துக்காட்டு:

أَلْقَارِعَةُ مَاالْقَارِعَةُ

நூன் சாகின், தன்வீன் குறித்த சட்டங்கள்

1. இள்ஹார் (اِظْهَار): நூன் சாகின் அல்லது தன்வீனை அடுத்து தொண்டை எழுத்துகள் (ء ه ع ح غ خ) வந்தால், நூனைத் தெளிவாக வெளிப்படுத்தி உச்சரிக்க வேண்டும். குன்னா செய்யக் கூடாது.

2. இக்ஃபா (اِخْفَاء): நூன் சாகின் அல்லது தன்வீனை அடுத்து

ت ث ج د ذ ز س ش ص ض ط ظ ف ق ك

ஆகிய பதினைந்து எழுத்துகள் வந்தால் மூக்கில் மறைத்து ஓத வேண்டும். அதாவது, நாக்கை நூனின் மக்ரஜுக்கு உயர்த்தாதீர்கள். நாக்கின் பின்பாகத்தையும் உயர்த்தாதீர்கள். மூக்கில் நூனை மறையுங்கள். இதன் பெயரே குன்னா.

குன்னா செய்யும்போது நூன் சாகினுக்கு அடுத்து மெல்லின எழுத்துகள் வந்தால், குன்னாவும் மெல்லியதாக இருக்க வேண்டும். வல்லின

பாடம்: 11	சுகூனுக்குரிய பயிற்சிகள்

أَنْتَ إِهْدِ بَعْدُ بَطْشَ سَعْىَ كُنْتُ

لَسْتَ أَمْرٍ بَرْدًا جَمْعًا حَبْلٌ خُسْرٍ

خَلْقًا سَبْحًا سَبْقًا شَأْنٌ صُبْحًا ضَبْحًا

عَبْدًا عَدْنٍ عَشْرٍ عَصْفٍ غَرْقًا

غُلْبًا فَصْلٌ قَدْحًا قَضْبًا كَأْسًا كَدْحًا

لَغْوًا مِسْكٌ نَخْلًا نَشْطًا نَفْسٍ نَقْعًا

يُسْرًا أَبْقَىٰ تَرْضَىٰ تَنْسَىٰ يَخْشَىٰ يَسْعَىٰ

يَتْلُوْا يَدْعُوْا تَجْرِى يَهْدِى يُغْنِى

أَلْقَتْ أَمْهِلْ إِقْرَأْ فَٱرْغَبْ فَٱنْصَبْ

قِ	قُ	خَا	خِ	خُ	غَا	غِ	غُ
حَا	حِ	حُ	عَا	عِ	عُ	هَا	هِ
هُ	ءَ	ءِ	ءُ				

الحُروف الحلقيّة : أ هـ ع ح غ خ
الحُروف الشفويّة : ف و ب م
الحُروف اللسانيّة : ق ك ج ش ى ض ل ن ر ط د ت ص س ز ظ ذ ث

பாடம்: 6 — பயிற்சி முறைகள்

أَبَدًا	أَحَدٌ	أَخَذَ	أَذِنَ	أَمَرَ	أَنَاْ
بَخِلَ	بَرَرَةٍ	جَعَلَ	جَمَعَ	حَسَدَ	حَشَرَ
خَشِيَ	خَلَقَ	خُلِقَ	ذَكَرَ	رَفَعَ	رَقَبَةٍ
سُرُرٌ	سَفَرَةٍ	صُحُفًا	وَسَطًا	طَبَقٍ	طَبَقًا
طُوًى	عَبَسَ	عَدَلَ	عَلَقٍ	عَمَدٍ	عِنَبًا
غَبَرَةٌ	فَعَلَ	قَتَرَةٌ	قُتِلَ	قَدَرَ	قُرِئَ

ق	و	قو	فو	فقل
قفل	يف	م	مر	حم
لم	تم			تمت

பாடம்: 3 தனிமை எழுத்துகள்

الٓمٓ	الٓمٓصٓ	الٓر	الٓمٓر
كٓهيعٓصٓ	طٰه	طٰسٓمٓ	
طٰسٓ	يٰسٓ	صٓ	حٰمٓ
حٰمٓ عٓسٓقٓ	قٓ	نٓ	

بَعْدَ الإِنتِهَاء مِن الدَّرس الثانِي وَالثالث (الحُروف المُرَكَّبة وَالمُقَطَّعَة) يَجبُ أن تكونَ لَدى الطَالب القُدرة فِي مَعْرِفَة وَتَمييز أيّ حَرْفٍ مِن حُروف القُرْآن مِن غَير تَرَدُّدٍ فَمَثلاً قَوله تعَالى: ﴿عَمَّ يَتَسَآءَلُونَ﴾ يَقْرَأُهُ الطَّالِبُ بالصُّورة التَّاليَة بِلا تَرَدُّدٍ: ع م ي ت س ا ء ل ون.

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

பாடம்: 1 அரபு எழுத்துகள்

ا ألف	ب با	ت تا	ث ثا	ج جيم
ح حا	خ خا	د دال	ذ ذال	ر را
ز زا	س سين	ش شين	ص صاد	ض ضاد
ط طا	ظ ظا	ع عين	غ غين	ف فا
ق قاف	ك كاف	ل لام	م ميم	ن نون
و واو	ه ها	ء همزة	ى يا	ے يا